# அத்தியவசியப் பொருட்களின் விலையேற்றமும் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளும்: மன்னார் நகர பிரதேச செயலகத்தை மையப்படுத்திய ஆய்வு

# Rising Prices of Essential Commodities and livelihood problems: a research based on Mannar Divisional Secretariat

T. T. Aaysha[1], M. A. M. Afrar[2], M. N. F. Sasna[3] & U. Israth[4]

*[1,2&3] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

*[4] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*

[1]*nishathajudeen299@gmail.com*, [2]*afrar993@gmail.com*, [3]*sasna3176@gmail.com*, [4] israth117@gmail.com

***ABSTRACT***

*Most of the activities in Sri Lanka come to standstill due to the recent economic crisis. Particularly, people who are living around the island are facing various difficulties in livelihood due to the rise of prices of essential commodities. Among these, Mannar from Northern Province is the most affected region. Thus, this research tries to identify the difficulties faced by the people who are living under Mannar Divisional Secretariat in the rise of prices of essential commodities. It uses descriptive method through qualitative approach. Primary data were gathered through in-depth interview and discussion with 30 people under this region. This research finds that the people in this region are facing difficulties than others. They are trying to get the essential commodities with hard efforts due to the rising prices of them and scarcity. Some of them lost their daily working also.*

***Keywords:*** *Essential Commodities, Rise of price, Economic crisis, Scarcity*

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கையில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையினால் நாட்டின் பல்வேறு செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அதிலும் குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தினால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வரும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவற்றுள் வடக்கில் மன்னார் மாவட்டத்தில் அதிக சனத்தொகையை கொண்ட மன்னார் நகர பிரதேசமானது இக் காரணங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகும். இந்தவகையில், மன்னார் நகர பிரதேச செயலகத்தின் கீழ் வாழும் மக்கள் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினாலும், பொருட்களின் தட்டுப்பாட்டினாலும் எவ்வாறான வாழ்க்கை சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் முறையில் விபரிப்பு முறையியலின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 150 கிராம சேவகர் பிரிவு காணப்படுவதுடன் நகர பிரதேச செயலகத்தின் கீழ் தாராபுரம் கிழக்கு சாயிட் சிட்டி பகுதியினை மையப்படுத்திய இவ் ஆய்வாக விளங்குகின்றது. இப்பகுதியில் 120 குடுப்பங்கள் காணப்படுகின்றது. அவற்றில் சுமார் 30 நபர்களிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதல்நிலை தரவானது ஆய்வு நேரத்தில் நேரடியாக வினாக்கொத்து கலந்துரையாடல் மற்றும் ஆழமான நேர்காணல் ஊடாகவும் தகவல் சேகரிக்கப்பட்டது. இந்தவகையில், இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையினால் ஏற்பட்டிருக்கும்*


ISBN: 978-624-5736-55-3

*அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் மற்றும் தட்டுப்பாடும் இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் வெகுவாக பாதிக்கச் செய்துள்ளது. அந்தவகையில் மன்னார் நகர பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் இவ்வாறான நெருக்கடிநிலைமையினால் பாரிய சிக்கலான தன்மைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அந்தவகையில் இம்மக்கள் வாழ்வாதார ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் விலை ஏற்றத்தினால் அவர்களது குடும்ப செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்கிறார்கள், தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *அத்தியவசிய பொருட்கள், விலையேற்றம், பொருளாதார நெருக்கடி, தட்டுப்பாடு*

---

### *1. அறிமுகம்*

*இன்றைய உலகில் பிரதான பேசுப்பொருளாக பொருளாதாரம் விளங்குகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது ஏனைய காரணிகளை விட பொருளாதாரத்தைக் கொண்டு பிரதானமாக நிர்ணயிக்கப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி நிலையைக்கொண்டு உலக நாடுகளை அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் என வகைப்படுத்திகின்றோம். உலகின் மிக முக்கிய சக்தியாக காணப்படுகின்ற இப்பொருளாதாரம் மாற்றங்களுக்கு உட்படக் கூடியவை அதாவது சில போது அவை வளர்ச்சி அடைகின்றன. மாறாக சில போதும் வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறு வளர்ச்சியில் பின்தங்கிய நிலையும் வளர்ச்சியை தடுக்கும் காரணிகளும் நாடுகளில் பொருளாதார நெருக்கடி நிலையை தோற்றுவிக்கின்றது. நாடுகளில் பொருளாதார நெருக்கடி பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது யுத்த நடவடிக்கைகள் அனர்த்த இழப்பீடுகள் தேசிய வருமானம் போன்ற பல காரணிகளை எடுத்துக்காட்டலாம். இவற்றிலிருந்து நாடுகளையும் மீட்டெடுப்பதற்கு ஏனைய உலக நாடுகள் மட்டுமன்றி சர்வதேச அமைப்புகளால் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்ற பல உதவித் திட்டங்களை வழங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.*

*இவ்வாறானதொரு நிலையில் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து வரும் நாடும் ஆசியாவின் மிக முக்கிய செல்வாக்கினை கொண்ட நாடாகவும் விளங்கும் இலங்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் கவனம் செலுத்துவதானது முக்கியமானதாகும்.*

*இலங்கையானது கடந்த காலங்களில் அதாவது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சி காலத்தில் பின்பற்றப்பட்ட மூடிய பொருளாதாரக் கொள்கை மற்றும் 1990களில் ஏற்பட்ட உள்நாட்டு ஆயுத மோதல் என்பனவற்றை தொடர்ந்து தற்போதைய 2019 ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததைக் காணலாம்.*

*இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்டது வடமாகாணமானது மேலே குறிப்பிட்ட யுத்தத்தினால் வெகுவாக பாதிக்கப்பட்டதுடன் இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் சிக்குண்டுள்ளது அதிலும் குறிப்பாக மன்னார் மாவட்ட மக்கள் இதனால் மிக மோசமான பொருளாதார விளைவுகளை சந்திக்க நேரிட்டது.*


ISBN: 978-624-5736-55-3

இவ்வாறான பொருளாதார நெருக்கடி நிலையினால் மன்னார் நகர பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்கள் தமது வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் அண்மைக்காலங்களாக பல இடர்பாடுகளை சந்திக்கின்றார்கள். அவற்றுள் பொருட்களின் விலை உயர்வு மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றுக்கொள்ளல் பொருட்களுக்கு தட்டுப்பாடு போன்றவற்றை குறிப்பிடலாம்.

மன்னார் மாவட்டத்தில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதியை மன்னார் நகர பிரதேசமாகும். மிகுதி பிரதேசங்களான முசலி, நானாட்டான், மடு மாந்தை போன்றன ஒப்பீட்டளவில் குறைவான சனத்தொகையைக் கொண்டிருப்பதனால் மன்னார் நகர பிரதேச மக்களே அதிகளவான வாழ்வாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவ்வாறாக மன்னார் நகர பிரதேச செயலகத்திற்குட்பட்ட அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவை தொடர்பான மக்களின் மனப்பாங்கு மற்றும் இந்நிலையிருந்து மக்களை மீட்டுப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வானது அமையப்பெற்றுள்ளது.

### 2. ஆய்வு பிரச்சினை

இலங்கையில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையினால் நாட்டின் பல்வேறு செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அதிலும் குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தினால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வரும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவற்றுள் வடக்கில் மன்னார் மாவட்டத்தில் அதிக சனத்தொகையை கொண்ட மன்னார் நகர பிரதேசமானது இக் காரணங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகும்.

மன்னார் நகர பிரதேச மக்கள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தினால் அவர்கள் வாழ்வாதார திணை கொண்டு நடாத்த எவ்வாறான வழிமுறைகளைக் கையாளுகின்றனர் என்பவை தொடர்பான விடயங்களை ஆய்வு பிரச்சினையாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. ஆய்வு நோக்கம்

மன்னார் நகர பிரதேச செயலகத்தின் கீழ் வாழும் மக்கள் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினாலும், பொருட்களின் தட்டுப்பாட்டினாலும் எவ்வாறான வாழ்க்கை சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை கண்டறிதல்.

### 4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறையில் விபரிப்பு முறையியலின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. வடமாகாணமானது யாழ்ப்பாணம் கிளிநொச்சி வவுனியா முல்லைத்தீவு மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொண்டுள்ளது. இதில் மன்னார் மாவட்டமானது ஐந்து பிரதான பிரதேச செயலகங்களாக பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றில் மன்னார் நகரம் மாந்தை மடு நானாட்டான் முசலி ஆகியன காணப்படுவதுடன் இவ்வாய்வுக்கான ஆய்வு பிரதேசமாக

*மன்னார் நகர பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 150 கிராம சேவகர் பிரிவு காணப்படுவதுடன். நகர பிரதேச செயலகத்தின் கீழ் தாராபுரம் கிழக்கு சாயிட் சிட்டி பகுதியினை மையப்படுத்திய இவ் ஆய்வாக விளங்குகின்றது. இப்பகுதியில் 120 குடுப்பங்கள் காணப்படுகின்றது. அவற்றில் சுமார் 30 நபர்களிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தியாவசியப் பொருட்களுக்கான தொடர்ச்சியான விலை ஏற்றமானது எந்த வகையில் தாக்கம் செலுத்துகிறது என்பதை கண்டறிய பிரதேசத்தில் உள்ள முதியோர், சமூகம் இளைஞர், யுவதிகள் இயல்பு வாழ்வு மாற்றப்பட்டுள்ளது. என்பதை அடிப்படையாகக் கொண்டு இத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதல்நிலை தரவானது ஆய்வு நேரத்தில் நேரடியாக வினாக்கொத்து கலந்துரையாடல் மற்றும் ஆழமான நேர்காணல் ஊடாகவும் தகவல் சேகரிக்கப்பட்டது.*

### *5. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்*




*அத்தியாவசிய பொருட்கள் எனும்பொழுது சாதாரணமாக அனைவராலும் அதாவது வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களும், எளிய மக்களும் தினசரி அவர்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்களையும் அவர்களுடைய வேலைப்பளுவை குறைக்க உதவுவதே அத்தியாவசிய பொருட்கள் என கூறமுடியும்.*

*அந்நிய தொகை வெகுவாக குறைவடைந்து வருவதை அடுத்து பல்வேறு அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதிக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. இந்த நிலைமைகளில் இங்கு பெரும்பாலான பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் அதேவேளை ஏனைய பல்வேறு பொருட்களுக்கும் விலை பெருமளவு அதிகரித்துள்ளதை காணலாம். அந்தவகையில் அத்தியாவசிய பொருட்களான சிலவற்றின் விலைகள் பின்வருமாறு*

அட்டவணை 1: பொருட்களின் விலை

| பொருட்கள் | முன்னைய விலை | தற்போதய விலை |
|---|---|---|
| 1) சீனி | 85/= | 340/= |
| 2) மா | 80/= | 300/= |
| 3) எண்ணெய் | 350/= | 900/= |
| 4) செமன் டின் | 380/= | 700/= |
| 5) நெத்தலி | 400/= | 1500/= |
| 6) பச்சரிசி | 60/= | 220/= |
| 7) முட்டை | 14/= | 45/= |
| 8) பால்மா | 380/= | 1090/= |
| 9) குழந்தைகளுக்கான பால்மா | 600/= | 1240/= |
| 10) சவர்க்காரம் | 80/= | 235/= |
| 11) பெட்ரோல் | 137/= | 420/= |
| 12) சமையல் எரிவாயு | 1750/= | 6850/= |


ISBN: 978-624-5736-55-3

***5.1 பெண் தலைமைத்துவத்தின் தொழில் நடவடிக்கைகள் பாதிப்பு***

*அத்தியாவசியப் பொருட்களுக்கான தொடர்ச்சியான விலையேற்றம் இங்கு உள்ளவர்களின் தொழில் நடவடிக்கைகளில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. இப்பகுதிகளில் பெண்கள் பெரும்பாலும் செய்யும் தொழில்களாக உணவு தயாரித்துக் கொடுத்தல் தையல், கூலி வேலைகள், கால்நடை வளர்ப்பு, நிலக்கடலை வியாபாரம், பிட்டு, அப்பம் விற்பனை போன்ற பல தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இவ்வாறான நிலையில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயு தட்டுப்பாடு, அதிகரிப்பு, விறகு விலை அதிகரிப்பு போன்றவற்றினால் தொடர்ந்தும் அவர்களினால் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது பற்றி ஒருவர் குறிப்பிடுகையில்,*

*'நான் பிட்டு மற்றும் இடியப்பம் விற்று அதிலிருந்து வரும் சிறு இலாபத்தை வைத்து எனது குடும்ப செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறேன். ஆனால் தற்போதைய இந்த நாளாந்த விலை அதிகரிப்பினால் என்னால் வியாபாரத்திற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்யமுபியாதுள்ளது. கோதுமை மா 80 ரூபாவிருந்து தற்போது 250/= ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இன்னும் எரிபொருள் தட்டுப்பாடு, மண்ணெண்ணை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலையும் உருவாகியுள்ளது. இவ்வாறு இருக்கையில் எனது தொழிலை வழமைபோல் முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளேன்.'*

*இவ்வாறு பெண் தலைமைத்துவ குடும்பத்தின் மத்தியில் ஏற்கனவே காணப்படுகின்ற வறுமையினை மோசமடைய செய்யும் வகையில் இந்த அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் அவர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கச் செய்துள்ளது. இது தொடர்பாக கடலை வியாபாரம் செய்யும் பெண் குறிப்பிடுவதாவது.*

*'எனக்கு வயது 50. நான் நிலக்கடலை விற்று அதிலிருந்து வரக்கூடிய இலாபத்தில் வாழ்க்கைச் செலவுகளை மேற்கொள்கிறேன். தற்போதைய விலை அதிகரிப்பினால் போதிய இலாபமடைய முடியவில்லை. ஆரம்பத்தில் 200ஃஸ்ரீ ரூபாயாக இருந்த கடலை தற்போது 650/= ரூபாவாக காணப்படுகின்றது. இவ்வளவு இருக்க அதிக தொகை என பெரும்பாலானவர்கள் வாங்குவதையும் நிறுத்திக் கொண்டனர்.'*

*அதே போல இவர்கள் நம்பியிருக்கும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள், அவர்களுக்கான மருத்துவ செலவுகள், உட்பட ஏனையவர்களை வழமைபோல வழிநடத்திக் கொண்டு செல்ல முடியாத நிலை தள்ளப்பட்டுள்ளார்கள். இதுபற்றி அப்பம் விற்கும் பெண் ஒருவர் குறிப்பிடும் பொழுது,*

*'நான் இரண்டரை வருடங்களாக அப்பம் விற்கும் தொழில் செய்கிறேன். அதிகாலையில் கடைக்கு அப்பம் விற்று வருகிறேன். எனக்கு 3 பிள்ளைகள் உண்டு. அவர்களின் கல்வி உட்பட சகல செலவுகளையும் அதிலிருந்து வரக்கூடிய இலபத்திலிருந்தே பெறப்படுகின்றன. ஆனால் இப்போதைய விலை உயர்வானது எனது தொழிலினை பெரிதும் பாதித்துள்ளது. கோதுமைமாவின் விலை மண்ணெண்ணை பெற்றுக்கொள்ள முடியாத நிலை இதனால் தொழில்*


ISBN: 978-624-5736-55-3

*செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றேன். இதனை நம்பி இருக்கும் எமது குடும்ப நிலையும் அதிகம் பாதிப்படைந்துள்ளது'*

*நேர்காணல் மூலம் பெறப்பட்ட இவ்வாறான பெண் தலைமைகளின் கருத்துக்கள் மூலம் மன்னார் மாவட்டத்தில் இலங்கையில் காணப்படுகின்ற அதிகரித்த விலை ஏற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடும் பெண் தலைமைத்துவத்துக்கு மத்தியில் வாழும் குடும்பங்களுக்கு பாரிய சவாலை ஏற்படுத்தி வருகின்றது என்பது தெளிவாக விளங்குகிறது.*

***5.2 எரிபொருட்களை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்றல்***



*அத்தியாவசிய பொருட்களை பெற்று கொள்வதற்காக நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் அதிலும் குறிப்பாக மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் வரிசையில் அதிக நேரம் காத்திருக்க கூடிய நிலை உருவாக்க பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அத்தியாவசிய பொருட்கள், சமையல் எரிவாயு, எரி பொருள் பற்றாக்குறையினால் இங்குள்ளவர்கள் எதிர் நோக்கியுள்ள நெருக்கடி நிலமையானது நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.*

*மன்னார் எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல், பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். மண்ணெண்ணெய் மாதத்திற்கு ஒரு முறை பெறப்படுகிறதும் கிராம உத்தியோகத்தர் ஊடாக குடும்ப அட்டை தரப்பட்டுள்ளது. அதனை எடுத்து சென்று ஒரு குடும்பத்திற்கு 5L மாத்திரம் பெறமுடிக்கின்றது. அதிலும் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தும் எரிபொருள் இன்றி வீடு திரும்பும் சூழ்நிலையும் காணப்படுகின்றன. இது பற்றி ஒருவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.*

*'எனது வீட்டில் இருந்து 2km தொலைவில் உள்ள எரிபொருள் நிலையத்திற்கு சென்று வீட்டுக்கு தேவையான மண்ணெண்ணெய்யை பெற்று கொள்ள வேண்டியுள்ளது.அதிலும் நீண்ட நேரம் வரிசையில் நின்று நெருக்கடி நிலைக்கு உள்ளாகும் சூழ்நிலையும் சில வேளைகளில் அதிக நேரம் காத்திருந்தும் மண்ணெண்ணெய் கிடைக்காமலும் வீடு திரும்பி உள்ளேன்'*




*அதே போல எரிபொருட்களின் விலையானது மாதத்திற்கு ஒரு முறை விலை அதிகரித்து உள்ளது அதற்கு அமைய பெற்ரோல் 1L விலை 82/=வால் அதிகரிக்கப்பட்டது புதிய தற்போதைய விலை 420/= ஆகும் .மற்றும் சூப்பர் டீசலின் விலை 116/= அதிகரிக்கப்பட்டுள்ளத்துடன் அதன் புதிய விலை 445/= ஆகும் இதனால் அத்தியாவசிய பயணங்கள் கூட மேற்கொள்வதில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். அதே போல ஏனைய சுற்றுலா, மற்றும் வெளி பயணங்களும் இதனால் தடைப்பட்டுள்ளன. இது தொடரபாக ஒருவரின் கருத்தானது,*

*'நான் வேலை செய்யும் இடம் வீட்டில் இருந்து 3KM தொலைவில் இருக்கின்றது. எரிபொருள் விலை ஏற்றத்தின் முன்பு தினசரி எனது வாகனத்தில் சென்று வரமுடிந்தது ஆனால் தற்போது அதிக*

*விலை உயர்வால் சென்றுவர 2L பெற்றோல் தேவைப்படுகின்றது. இந்த விலை ஏற்றதால் தொடர்ச்சியாக வாகனத்தில் செல்ல முடியாமையும், கிடைக்கும் வருமானத்தில் அரைவாசி பெற்றோளுக்கு செலவிடுகின்றேன்'*



*அவ்வாறே, சமையல் எரிவாயு, சிலிண்டர்களின் விலையானது வரலாறு காணாத அளவிற்கு விலை உயர்ந்துள்ளது.கடந்த மாதம் விலை ரூபா 2675/= இருந்தது தற்போது 6850/= ஆக உயர்ந்துள்ளது. மேலும் இதனை பெற்றுக்கொள்வதிலும் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர். சிலிண்டர் வாங்குவதற்காக 3 நாட்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை காணப்படுகிறது மேலும் தட்டுப்பாடு அதிகரிப்பதால் மட்டுப்படுத்தியே கொடுக்க படுகின்றது. இதனால் வீட்டு சமையல் வேலைகளை செய்ய முடியாமை, ஹோட்டல் உட்பட சிறுதொழில் முயற்சிக்களில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரம் என பல துறைகளில் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இது தொடர்பாக ஒருவர் குறிப்பிடும் போது*

*'நான் ஹோட்டல் ஒன்றில் கூலி வேலை செய்து வருகின்றேன். கடந்த மாதங்களில் சமையல் எரிவாயு விலை மாதாந்தம் விலை ஏறிக்கொண்டே செல்வதால் ஹோட்டல் சுமார் 2 மாதங்களாக மூடப்பட்டுள்ளது. இதனால் இது போன்று கூலிவேலை செய்யும் எமக்கு தொழில் நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.'*

*'எங்களது நாளாந்த வீட்டுப் பாவனைக்கு கூட எரிவாயு இல்லாமல் அவதிப்படுகின்றோம். எரிவாயு சிலிண்டர்க்கு மாற்றீடாக மண்ணெண்ணெய், அடுப்பை பயன்படுத்தினால் அதற்கும் தட்டுப்பாடு நீண்ட நேரம் காத்திருத்தல் என பல சிரமங்களை எதிர் கொண்டு வருக்கினேறோம்'*

### *5.3* விவசாயம் மற்றும் மீன்பிடி தொழிலாளர்களின் குடும்ப நிலை, தொழில் நடவடிக்கைகள் பாதிப்பு

*மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிரதான தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் விளங்குகின்றது. இங்கு உள்ளவர்களில் அனேகமானவர்களது தொழிலாக மீன்பிடி காணப்படுகிறது. அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை ஏற்றத்தின் காரணமாக இவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் இங்குள்ளவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். மீன் பிடிக்கத் தேவையான எரிபொருள் விலை உயர்வினால் அவற்றினை வழமைபோன்று முன்னெடுக்க முடியாத நிலைமையும், விவசாயத்திற்கு தேவையான யூரியா இன்மையாலும் வெகுவாக பாதிப்படைந்துள்ளது. இன் நிலைமையால் இவர்களை நம்பி இருக்கும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் நாளுக்கு தேவையான குடும்ப செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் பல சிக்கல்களுக்கு உள்ளாகி வருகின்றனர் இதுபற்றி ஒருவர் குறிப்பிடுகின்ற பொழுது,*

*'நான் சுமார் ஐந்து வருடங்களாக கடல் தொழில் செய்து வருகிறேன் மீன்பிடி எனது பிரதான தொழிலாக காணப்படுகிறது இன்றைய காலகட்டத்தில் எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக எமது தொழில் செயற்பாடுகளை சீராக முன்னெடுக்க முடிவதில்லை.*

*இந்நிலைமைகளில் எமது தொழில் நடவடிக்கையை பாதிக்கப்பட்டுள்ளதால் எங்களது குடும்ப நிலையும் பல்வேறு வாழ்க்கை சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். இதனால் அண்மையில் மன்னார் மீனவ சங்கத்தினால் 5 கிலோ அரிசி போன்ற நிவாரணங்கள் எமக்கு கிடைத்தது.'*

அதேபோல விவசாயத்திற்கு தேவையான உரங்கள் யூரியா உள்ளிட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள். மேலும் தொழிலாளர்கள் பற்றாக்குறை, பண்படுத்துதல் அறுவடை நேரங்களில் இயந்திர பாவனை போன்றவற்றிற்கு தேவையான எரிபொருள் இன்மை, போதியளவு மழைவீழ்ச்சியின்மை என்பவற்றால் விவசாய நடவடிக்கைகளும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. விவசாயத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது மக்களது அன்றாட தேவையான உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு சவாலான சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

### 5.4 தினசரி அதிகரிக்கும் காய்கறி விலையேற்றம்

அத்தியாவசிய பொருட்களில் ஒன்றான காய்கறிகளின் விலையானது தற்காலத்தில் நாளாந்தம் உச்சமடைந்து செல்கின்றது இதனால் இப் பிரதேச மக்களினால் அதிக தொகை கொடுத்து அவற்றை பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது மரக்கறிகள் தட்டுப்பாட்டினால் அவற்றிற்கான விலை இரண்டு மடங்காக காணப்படுகின்றது அதேபோல கறி வகைகளான மீன் இறைச்சி இறால் கோழி போன்றவற்றின் விலையும் இன்று வெகுவாக அதிகரித்துள்ளது அவற்றில் சில விலைகளை பின்வருமாறு.

அட்டவணை 2: கறி வகைகளின் விலை

| கறி வகைகள் | முன்னைய விலை | தற்போதய விலை |
|---|---|---|
| 1) கோழி | 800/= | 1400/= |
| 2) மீன் | 600/= | 1200/= |
| 3) இறால் | 1000/= | 2000/= |
| 4) கணவாய் | 800/= | 1600/= |
| 5) மாட்டிறைச்சி | 800/= | 1300/= |

அட்டவணை 3: மரக்கறி வகைகளின் விலை

| மரக்கறி வகைகள் | முன்னைய விலை | தற்போதய விலை |
|---|---|---|
| 1) பச்சை மிளகாய் | 250/= | 800/= |
| 2) போஞ்சி | 200/= | 800/= |
| 3) தக்காளி | 120/= | 800/= |
| 4) வெங்காயம் | 200/= | 240/= |
| 5) பீட்ரூட் | 120/= | 400/= |
| 6) கரட் | 300/= | 400/= |
| 7) தேசிக்காய் | 200/= | 800/= |

இதனால் இப்பிரதேச மக்களிடம் போதிய வருமானம் இன்மையால் சிலர் காய்கறி வகைகளை வாங்குவதையும் நிறுத்திக் கொண்டனர் இவற்றால் அவர்களின் பிள்ளைகளுக்கு போதிய உணவினை வழங்க முடியாத நிலையும், வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாள் மட்டும் பழிவாங்குதல், உணவு தட்டுப்பாடு என பல பிரச்சனைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இது பற்றி ஒருவர் குறிப்பிடும் பொழுது,


ISBN: 978-624-5736-55-3

*'ஆரம்பத்தில் நான் 1500 ரூபாய் வைத்து நாளொன்றுக்கு தேவையான மரக்கறி மற்றும் கறி,அரிசி உள்ளிட்ட பொருட்களை பெற்றுக்கொண்டேன் ஆனால் இன்றைய விலை அதிகரிப்பின் பிற்பாடு வழமைபோல் அவற்றை பெற்றுக் கொள்ள முடியவில்லை. மரக்கறிகளின் விலை நேற்று ஒரு விலை இன்று ஒரு விலை என அதிகரித்துக் கொண்டே செல்கிறது இதனால் நான் அவற்றை வாங்குவதையும் நிறுத்திக்கொண்டேன் மற்றும் கறிவகை வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டும் வாங்குவேன். ஏனைய நாட்களில் முட்டை சோயா என வாங்க முடிகிறது. இதனால் எங்களின் பிள்ளைகளுக்கு போசாக்கான உணவுகளை வழங்க முடியாத நிலையும் காணப்படுகிறது.'*

***5.5 கடன் பிரச்சினைகள் மற்றும் வருமானமின்மை***

*அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய சில அத்தியாவசிய பொருட்களை கூட கையிலுள்ள தொகையினை வைத்து வாங்கிக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் அயலவர்கள், உறவினர்கள் மற்றும் சமுர்த்தி வங்கிகள் போன்றவற்றிலிருந்து கடன்களை பெற்று பிரதான பொருட்களை கொள்வனவு செய்கின்றனர். மேலும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்கின்றது. அதைப்போல போதிய வருமானம் இன்மையால் கடன்களை ஈடு செய்யவும் முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. இது பற்றி ஒரு நபர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்,*

*'நாளாந்தம் சீவிப்பதே பெரும் விடயமாக இருக்கும் இக்காலத்தில் உணவிற்கு தேவையான அரிசி,மா, மரக்கறி, முட்டை, பால் உள்ளிட்ட பிரதான அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை உயர்வினால் அதற்குரிய தொகையை கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்யும் வசதியும் இல்லை. இதனால் மன்னார் சமுர்த்தி வங்கி போன்றவற்றில் கடனும் பெற்றுள்ளோம். இவ்வாறு கடன்நிலை மென்மேலும் உச்சமடைந்து செல்வதால் அவற்றை ஈடு செய்யவும் எம்மிடம் போதிய வருமானமும் இல்லை.'*

*அதே மாதிரி இவ்விலையேற்றத்தினால் தினசரி கூலி வேலை செய்து வருவோரின் குடும்ப நிலையும் பாதிப்படைந்துள்ளது. அதாவது அதிக விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்ய போதிய வருமானம் காணப்படவில்லை. இதனால் நாள் ஒன்றிற்கான வருமானம் 1500 ரூபாய் ஆகும். இதற்கேற்ப குடும்ப செலவானது நாளொன்றுக்கு குறைந்தது 2300 ரூபாய் தேவைப்படுகிறது. இதனால் கூலித் தொழில் செய்வோரின் தொழில் நிலையும் பாதிப்படைந்தால் அத்தியாவசிய பொருட்களை பெறுவதில் இன்னும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதுதொடர்பாக ஒருவர் குறிப்பிடும்பொழுது,*

*'அன்றாட மூணு வேளை உணவுக்கான பொருட்களை கூட கையிலுள்ள பணத்தை வைத்து பெற்றுக்கொள்ள முடியவில்லை. வரக்கூடிய வருமானத்திலும் பார்க்க செலவு மூன்று மடங்காக காணப்படுகின்றது. இந்நிலையில் குடும்ப உறுப்பினர்களின் கல்வி நடவடிக்கைகள், மருத்துவ செலவுகள், வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெறுதல் உட்பட ஏனைய தேவைகளுக்கும் வருமானம் போதாமை. இந்த நிலைமை இன்னும் தொடர்ந்து செல்லும் ஆக இருப்பின் நாங்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிடலாம்'*

***5.6 அவசர போக்குவரத்து தடைப்படல்***

*பொருட்களின் திடீர் விலையேற்றமானது மன்னார் மாவட்ட மக்களுக்கு மாத்திரமல்லாது முழு இலங்கை வாழ் மக்களுக்கும் பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது. அந்த வகையில் மக்களின்*

*தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அவசர போக்குவரத்துக்கும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. எரிபொருட்களின் விலையேற்றம், பஸ் கட்டணங்கள் அதிகரிப்பு மற்றும் ரயில் கட்டணங்கள் அதிகரிப்பு என்பனவே மக்களது இவ்வாறான அவசர போக்குவரத்துக்கு தடையாக அமைந்து மக்களது சிக்கலான சூழ்நிலை காரணமாக காணப்படுகின்றது. இதனால் அன்றாடம் தொழிலுக்கு செல்பவர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் என பலரும் பல சவாலான சூழலை எதிர் கொண்டார்கள். இதுபற்றி ஒருவரிடம் வினவப்பட்ட போது,*

*'எரிபொருள் விலை ஏற்றத்தினால் எனது பல்வேறு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது உரிய இடத்திற்கு உரிய நேரத்தில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது எரிபொருள் விலையேற்றத்தினால் பேருந்துகள் உரிய நேரத்திற்கு வருகை தருவதில்லை. இது சுமார் 4 மணி நேரத்திற்கு ஒருமுறை வருகை தருவதால் எனது வீட்டிலிருந்து பாடசாலை 3 கிலோமீட்டர் தொலைவில் காணப்படுகின்றது. இதனால் நானும் எனது சகோதரிகளும் உரிய நேரத்தில் பாடசாலை செல்வதில் தாமதமாகின்ற நிலை காணப்படுகின்றது. அவை உட்பட அவசரகால போக்குவரத்து  செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. அண்மையில் துக்கவீடு, திருமண வைபவ விழாக்களில் கலந்து கொள்ள முடியாத நிலையும் காணப்பட்டது. மேலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் இவ்வாறான சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.'*

***5.7 மக்களின் போசாக்கு மட்டம் குறைவு***

*இலங்கையில் அண்மைக்காலமாக நிலவி வருகின்ற பிரச்சினையான அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு மக்களது போசாக்கு மட்டம் குறைவிற்கு அடிப்படை காரணமாக இருக்கின்ற அதேவேளை மன்னார் நகரசபை வாழ்கின்ற மக்களது போசாக்கு மட்டுமானது குறைந்து காணப்படுவது இங்கு பாரிய சவாலாக காணப்படுகின்றது. அதாவது கொரானாவின் ஆரம்பத்தில் இருந்தே பொருட்களுக்கான அதிகபட்ச விலையேற்றம், அரிசி உட்பட தானியங்கள், மரக்கறி, பழ வகைகள் மற்றும் பால் வகைகள் என்பவற்றுக்கான விலை இருமடங்காக காணப்படுகின்றது. இதனால் இப்பிரதேச மக்களுக்கு  வருமானமின்மை, தொழில் பாதிப்பு போன்ற அன்றாட சவால்கள் மூலமாக மக்களால் போதியளவு போசாக்கான உணவு வகைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு பிரதேச மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மேலும்  இப் பிரதேசத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அன்றாடம் கூலித் தொழில் செய்பவர்கள், வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் என பலதரப்பட்டவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் இவர்களது நாளாந்த உணவுக்கான வருமானத்தை ஈட்டிக் கொள்ளவே சிரமப் படுகின்றாரகள். இவ்வாறு இருமடங்கு விலையுயர்ந்த போசாக்கான உணவு வகைகள் பெற்றுக்கொள்ள முடியாமையால் அவர்களது போசாக்கு மட்டம் குறைவாக காணப்படுகின்றது. இதுபற்றி ஒருவரிடம் வினவப்பட்ட போது,*

*'எனது கணவர் நாளாந்தம் கூலி வேலை செய்து வருகின்றார். அவருக்கு ஒரு நாள் ஊதியம் சுள.1200 எனக்கு இரண்டு பிள்ளைகள் காணப்படுகின்றார்கள். தற்போதைய விலையேற்றத்தினால் அவர்களுக்கான போசாக்கான உணவு வழங்குவதில் பல்வேறு தடைகள் காணப்படுகின்றது.*


ISBN: 978-624-5736-55-3

*அதாவது தானியங்களான பயறு, கடலை, பருப்பு உள்ளிட்ட பொருட்கள் அதிகளவில் காணப்படுகின்றது. பழவகையின் விலையேற்றத்தினால் அவர்களுக்கு அவற்றையும் பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் திரிபோச ஊட்டச்சத்து தற்போது வழங்கப்படுவதில்லை. இதனால் பிள்ளைகளுக்கு போசாக்கான உணவு வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது'*

***5.8 மருந்துகளின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு***

*மன்னார் மாவட்ட நகர சபை பிரதேசத்தில் அத்தியவசிய பொருட்களின் தட்டுப்பாட்டை தொடர்ந்து மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மன்னார் நகர சபையில் வாழ்கின்ற மக்கள் தங்களது நோய்களுக்கு போதியளவு மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதால் வைத்தியசாலைகளிலும் மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்தோடு மருந்துகளுக்கான விலை அதிகரிப்பால் வெளி மருந்து கடைகளில் அவற்றை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு இப் பிரதேச மக்கள் காணப்படுகின்றார்கள்.*

*மேலும் நீரிழிவு உயர் குருதியமுக்கம் மற்றும் சத்திரசிகிச்சை போன்ற நோயாளிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறு மருந்து பற்றாக்குறை நிலவுவதால் பல நோயாளிகள் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். சில நோயாளிகளுக்கு நோயின் அடிப்படையில் உணவு கொடுக்க முடியாதநிலை, எரிபொருள் தட்டுப்பாட்டினால் ஆம்புலன்ஸ் சேவையில் சரியான நேரத்தில் செயற்படுவதில்லை, சத்திர சிகிச்சைக்கு தேவையான உபகரணங்கள் கருவிகள் இன்மை மற்றும் தொடர் மின் வெட்டு போன்ற காரணங்கள் மூலம் நோயாளிகள் அசௌகரியங்களை எதிர் கொள்கிறார்கள். இது பற்றி ஒருவரிடம் வினவப்பட்டபோது,*

*'நான் நீரிழிவு மற்றும் உயர் குருதியமுக்க நோயாளி என்பதால் வாராவாரம் கிளினிக் சென்று வருவதுண்டு. ஆனால் தற்போதைய இந்த காலகட்டத்தில் மருந்துகள் தட்டுப்பாட்டினால் உரிய கிழமைகளில் மருந்துகள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இவ்வாரத்துக்கானது அடுத்த வாரத்துக்கு என்று தள்ளி போடப்படுகின்றது. இதனால மருந்துகளை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. குழந்தைகளை எடுத்துக்கொண்டால் நாளாந்தம் ஏற்படக் கூடிய சாதாரண காய்ச்சலுக்கு கூட பணடோல் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பணடோல் தட்டுப்பாடு. ஆரம்பத்தில் பணடோல் ஒன்றின் விலை 1.50 சதமாக இருந்தது இப்போது ஒரு பணடோலின் விலை 7 ரூபாயாக காணப்படுகின்றது*

*ஆரம்பத்தில் ஒரு காட் பணடோலின் விலை 18 ரூபாய் தற்போது 80 ரூபாய். இவ்வாறு விலையுயர்ந்து காணப்பட்டாலும் அதிலும் தட்டுப்பாடு காணப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு சில கடைகளில் மட்டுமே காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமை காணப்படுவதால் நாளாந்த நோய்களுக்கான மருந்துகளை உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.'*

***6. முடிவுரை***

*இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையினால் ஏற்பட்டிருக்கும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் மற்றும் தட்டுப்பாடும்*

*இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் வெகுவாக பாதிக்கச் செய்துள்ளது. அந்தவகையில் மன்னார் நகர பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் இவ்வாறான நெருக்கடிநிலைமையினால் பாரிய சிக்கலான தன்மைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அந்தவகையில் இம்மக்கள் வாழ்வாதார ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் விலை ஏற்றத்தினால் அவர்களது குடும்ப செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்கிறார்கள், தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அந்த வகையில் பாதிப்புகளை குறைத்து, அவர்களது வாழ்வாதாரத்தை வழமைபோல் சீராகுவதற்கு சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***7. முன்மொழிவுகள்/பரிந்துரைகள்***

*மன்னார் நகர பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் தமது இயல்பு வாழ்வில் பொருட்களின் விலையேற்றத்தினால் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே இவ்வாறான சவால்களுக்கான காரணிகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.*

- *இப் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கும், மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் வாழ்க்கை சவால்களுக்கும் இவ் அரசாங்கத்தின் செயற்திறன் அற்ற தன்மையே காரணம் என்பதனை இவ் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.*
- *வருமானத்தைப் பொறுத்து செலவுகளை மட்டுப்படுத்திக் கொள்ளல். அதாவது ஆடம்பர செலவுகள், வெளியிடங்களுக்குச் சென்று உணவுகளை கொள்வனவு செய்தல், என்பனவற்றை குறைத்துக் கொள்வதன் ஊடாக நாளொன்றுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும்.*
- *இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் காணப்படுவதால் அவற்றிற்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொடுத்தல். அதாவது மீன்பிடி தொழிலில் ஈடுபடுவோருக்கு என குறித்த எரிபொருட்களை ஒதுக்கீடு செய்வதனூடாக அவற்றை நிவர்த்தி செய்ய முடியும்.*
- *வீட்டுத்தோட்டம் மற்றும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல், மரக்கறிகளின் விலை உச்சம் அடைந்துள்ளதால் இனி வரும் நாட்களில் அவற்றை ஈடு செய்யும் முகமாக வீட்டு தோட்டம் அமைத்தல் போன்றவற்றை ஊக்கப்படுத்துதல்.*
- *குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் அடிப்படையில் எரிபொருட்களை பெற்றுக்கொள்ளல் என்ற அடிப்படையில் எரிபொருட்கள் வழங்கப்பட்டால் அனைவராலும் பெற்றுக்கொள்ள முடிதல். அத்துடன் ஒரு எரிபொருள் நிலையத்தில் மாத்திரம் வழங்கப்படுவதால் பல நெருக்கடி நிலைமை ஏற்படுகிறது. அதற்கு பதிலாக ஏனைய நிலையங்களிலும் வழங்குவதன் ஊடாக நெருக்கடி நிலைமையை குறைக்க முடியும்.*
- *மக்கள் மத்தியில் புரிந்துணர்வு, ஒற்றுமை உணர்வு என்பவற்றை ஏற்படுத்துதல், ஏனெனின் நீண்ட நேரம் வரிசையில் நிற்றல், பொருட்கள் தட்டுப்பாட்டினால் வீடுதிரும்பல், போன்ற நிலைகளின் போது பொறுமையை கையாளுதல்.*
- *அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமையினால் அவற்றை குறித்த சாரார்கள் மட்டும் பெறல் என்ற மனப்பான்மை தவிர்ந்து. ஏனையவர்களின் நிலைமைகளையும் கருத்திற்கொண்டு செயல்படுதல்.*


ISBN: 978-624-5736-55-3

• *எரிபொருள் நிலையத்தில் எரிபொருட்களை ஒருவருக்கு இத்தனை வீதம் என ஒதுக்கீடு செய்வதனூடாக வரிசையில் நிற்கக்கூடிய அனைவராலும் அவற்றை பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும்.*

### *உசாத்துணைகள்*


Article dollar-crisis-sends/https://tamilwin.com/ accessed on 12.05.2022 at 10.10a.m

*இலங்கை பொருளாதார நெருக்கடி: உச்சத்துக்கு சென்ற அத்தியாவசிய பொருட்களின் விலை - மக்கள் பரிதவிப்பு.* https://www.bbc.com/tamil/. Accessed on 12.05.2022 at 9.30 a.m

*அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு-இலங்கை அரசாங்கத்துக்கு மற்றும் ஒரு பொருளாதார சவால்.* https://tamilwin.com/. Accessed on 12.05.2022 at 9.45 a. m

*சந்திரகுமார், சாமித்தம்பி. (2011). ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள மாவடிவேம்பு-2 மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான ஆய்வு.* Proceedings of the 1st International Symposium 2011 on Post-War Economic Development through Science, Technology and Management. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/1014

*றிபாஸ், ஏ.எச், ஆரா, எம்.என்.என்., ஆயிஷா, எஸ்.எப்., ரயீஸ்தீன், ஆர்., மிஸ்பாஹ், என்.எம். (2018). வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்: சம்புநகர் கிராமத்தை மையப்படுத்திய கள ஆய்வு. 5வது சர்வதேச ஆய்வரங்கு, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*

*முடிந்தவரை உதவிகளை வழங்குவோம் என ஜெய்சங்கர் உறுதியளித்தார்* /https://www.bbc.com/tamil/ Accessed on 12.05.2022 at 9.45a.m

*நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம்.* https://www.vaaramanjari.lk. Accessed on 12.05.2022 at 10.45a.m


**நேர்காணப்பட்டோர்**

| நபர் | பெயர் | நபர் | பெயர் |
|---|---|---|---|
| 1 | வஜிஹா | 16 | மஜிதா |
| 2 | அனுஹா | 17 | அஜித் |
| 3 | ரஹீம் | 18 | ஸலாம் |
| 4 | அர்சத் | 19 | வாஹிதா |
| 5 | ஜசீர் | 20 | அன்பஸ் |
| 6 | அக்ரம் | 21 | றிப்கான் |
| 7 | அன்ஸப் | 22 | சதிலா |
| 8 | றிபான் | 23 | பத்திலா |
| 9 | அப்ராஸ் | 24 | சபினா |
| 10 | மைசா | 25 | ஸம்சுன் |
| 11 | றிம்ஸியா | 26 | சஹ்னாஸ் |
| 12 | நஹாரியா | 27 | அம்னா |
| 13 | பிஸ்றுல் ஹாபி | 28 | அதீபா |
| 14 | ஆத்திகா | 29 | ராஸிகா |
| 15 | ஜீனத் | 30 | ஆசிக் |


ISBN: 978-624-5736-55-3